STC.No.44 /2026 **PW1.திரு.ரவிச்சந்திரன்**

தேதி– 06.05.2026

எதிரி ஆஜர்.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் 8ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் நன்றாக எழுத படிக்க தெரியும். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. எனது சொந்த ஊர் கம்பம் ஆகும். எனக்கு குள்ளப்பகவுண்டன் பட்டி தெரியுமா என்றால் தெரியாது. புகார்மனு , வழக்கறிஞர் அறிவிப்பு, நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் உள்ள விபரங்கள் எனக்கு நன்றாக தெரியுமா என்றால் தெரியும். எத்தனை லட்சத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரூ.3 லட்சத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எதிரியை எனக்கு 10 –15 வருடங்களாக தெரியும். ரூ.3 லட்சம் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் என்னுடன் மனைவி இருந்தார்.

2. எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் 16.11.2025ல் மாலை 05.00 மணியளவில் கொடுத்தேன். மேற்படி பணத்தை எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரொக்கமாக கொடுத்தேன். நான் வருமானவரி தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை, விவசாயம் செய்கிறேன். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு நான் எஸ்டேட் வைத்திருந்தேன் அதனை விற்பனை செய்துவிட்டேன். ரூ.3 லட்சம் எனக்கு எப்படி வந்தது என்றால் வீட்டில் பணம் இருந்தது, எலுமிச்சை தோட்டம் வைத்திருந்தேன் அதன் மூலம் பணம் வந்தது. காசோலையை எப்போது வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் 15.12.2025ல் தாக்கல் செய்தேன். என்ன காரணம் கூறி திருப்பப்பட்டது என்றால் எதிரியை சென்று நேரில் பார்க்கும்படியும், பணம் இல்லை என்று கூறி திருப்பப்பட்டது. அதன்பின்பு எதிரியை பார்த்தேனா என்றால் மறுநாள் சென்று பார்த்தேன், அவர் முறையாக பதில் சொல்லவில்லை.

3. காசோலையானது kindly contact Drawer Drawee Bank and please

present again என்ற காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டது என்றால் சரிதான். நான் திரும்பவும் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. சட்டதிட்டத்தின் படி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யவில்லை என்பதால் இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் எதிரி ஊரில் இல்லை என்றும், சென்னையில் எதிரி இருந்தார் என்றும், நான் பொய்யான விபரங்களை கூறி வழக்குதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. டெய்லர் மணிவாசகம் என்பவருடன் எதிரிக்கு இருந்த வரவு செலவின்போது கொடுத்த தாவா காசோலையை வைத்து நான் மணிவாசகத்திற்கு பிணாமியாக இருந்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, மணிவாசகத்திற்கும், எனக்கும் பேச்சு வார்த்தை இல்லை. மணிவாசகம் எனக்கு என்ன உறவு என்றால் மைத்துனர் ஆவார். எனக்கும், எதிரிக்கும் இதுவரை எந்தவொரு வரவு செலவு இல்லை என்றும், மணிவாசகத்திற்கும், எதிரிக்கும் இடையே வரவு செலவிற்கு ரூ.1 லட்சம் திருப்பி கொடுத்து எதிரி கொடுத்துவிட்டார் என்றும், எதிரியிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய் வழக்குதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. உண்மையில் நான் பணம் கொடுக்காததால்தான் எதிரி சென்னையில் இருந்த தேதியை இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மணிவாசகம் எனது நெருங்கிய மைத்துனர் என்பதால் அவருக்கு ஆதரவாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, மணிவாசகம் எனது அம்மா இறப்பிற்கும், எனது மகன் திருமணத்திற்கும் வரவில்லை. அவருக்கும், எனக்கும் பேச்சு வார்த்தை இல்லை. சட்ட நடமுறைகளை பின்பற்றமால் வழக்கு தாக்கல் செய்தள்ளதால் இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மணிவாசகம் செல்போன் நம்பர் என்னவென்றால் தெரியாது. எனக்கும், மணிவாசகத்திற்கும் பேச்சு வார்த்தை இல்லை என்பதை நிரூபிப்பதற்கு எனது கால் கிஸ்டிரியை தயாரா என்றால் தயார். எனக்கும் மணிவாசகத்திற்கும் பேச்சு வார்த்தை இல்லை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.06 18:31:03 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam